முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2023-02-26
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** வினைத்திறன் (efficiency) என்பது :

(1) சரியானதைச் செய்வது.

(2) சரியாகச் செய்வது.

(3) உள்ளீடுகளுக்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொடர்பு.

(4) உள்ளீட்டை வெளியீடாக மாற்றுவது.

**1.2** கீழ்வருவனவற்றுள் ஊழியர் ஒருவரின் பயனுறுதி வாய்ந்த பயிற்சியிலிருந்து பெறக்கூடிய ஓர் அனுகூலமாக **அமையாதது** எது?

(1) உற்பத்தித்திறன் அதிகரித்தல் (2) அதிக மேற்பார்வைக்கான தேவை

(3) மனவுறுதி மேம்படுதல் (4) குறைந்தளவான விபத்துகள்.

**1.3** போட்டியாளர்களுடன் தொடர்புடைய ஒரு பொருளின் பண்டக்குறி (brand) தொடர்பான நுகர்வோரின் எண்ணத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) நிலைப்படுத்தல் (2) இலக்குப்படுத்தல் (3) துண்டமாக்கல் (4) ஒருங்கிணைத்தல்

**1.4** கீழ்வருவனவற்றுள் மனித வள மிகைக்கான ஒரு தந்திரோபாயமாக அமைவது எது?

(1) மேலதிக நேர வேலை (2) முழு நேர ஊழியர்களை வாடகைக்கமர்த்தல்

(3) உப ஒப்பந்தம் (4) முடிவுறுத்தல்

**1.5** கீழ்வருவனவற்றுள் நிறுவன வடிவமைப்பைப் பாதிக்கின்ற ஒரு காரணியாக அமைவது எது?

(1) நிறுவனத்தின் அளவு (2) தந்திரோபாயம்

(3) தொழினுட்பம் (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** ....................... *(நிபுணத்துவ வலு / சட்டபூர்வ வலு)* ஆனது கம்பனியின் படிநிலையில் தனிநபர் ஒருவர் வைக்கப்பட்டுள்ள நிலையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**1.7** ....................... *(விற்பனை / பொருள்)* எண்ணக்கருவில், வாடிக்கையாளர்கள் அதிக தரமான பொருள்களை விரும்புகின்றனர்.

**1.8** ....................... *(அதிகாரம் / பொறுப்புக்கூறல்)* என்பது இணங்கிக்கொள்ளப்பட்ட எதிர்பார்ப்புகளின் வெளிச்சத்தில் செயலாற்றுகைக்கான பொறுப்பை ஏற்பதற்கும் விளக்கம் அளிப்பதற்குமான கடப்பாடு ஆகும்.

**1.9** ....................... (*வாடிக்கையாளரின் தனியுரிமையைப் பாதுகாத்தல் / விலை யுத்தம்*) என்பது நெறிமுறை சார்ந்த சந்தைப்படுத்தல் கோட்பாடுகளுக்கான ஓர் உதாரணமாகும்.

**1.10** ....................... *(வாழ்க்கைச் செலவு / வேலைத் தகுதி)* என்பது வெகுமதிகளின் உள்ளக ரீதியான தீர்மானக் காரணி ஒன்றாகும். (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல.* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** நிறுவனங்களுக்கான பண்டக் குறியிடலின் (branding) முக்கியத்துவத்திற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

**1.12** நிறுவனமொன்றிலுள்ள ஊழியர்கள் ஊக்கமிழந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தும் இரண்டு (02) சமிக்ஞைகளை (signs) குறிப்பிடுக.

**1.13** நிறுவனங்கள் ஊழியர்களை வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வதைக் காட்டிலும் உள்ளக ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதன் மீது கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

**1.14** பயனுறுதிமிக்க துண்டமாக்கலுக்கான இரண்டு (02) தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக.

**1.15** வியாபாரச் செயன்முறை மீள்-பொறியியலாக்கலின் இரண்டு (02) பிரதான பண்புகளை (key characteristics) குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

மாறுகின்ற சூழல் காரணமாக தமது வியாபாரங்களை முகாமை செய்யும்போது நிறுவனங்களின் பல முகாமையாளர்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு தற்போது முகங்கொடுத்து வருகின்றனர். இதனால், அவர்களது நிறுவனங்கள் தப்பிப் பிழைப்பதற்கும் வளர்ச்சியடைவதற்கும் பொருத்தமான முகாமைத்துவ நடைமுறைகளைப் பிரயோகிப்பதன் மூலமும் புதிய தொழினுட்பங்கள் மற்றும் தந்திரோபாயங்களைப் பின்பற்றுவதன் மூலமும் தமது நிறுவனங்களை முகாமை செய்வது முகாமையாளர்களின் பொறுப்பாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நவீன வியாபார உலகில் தகவல் தொழினுட்பம் எவ்வாறு சவால் மிகுந்ததாக மாறி வருகிறது என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாட்டின் இரண்டு (02) கோட்பாடுகளை (principles) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(c) ஒரு தந்திரோபாயத்தின் இரண்டு (02) வகிபாகங்களை (roles) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

திட்டமிடல் என்பது முகாமைத்துவத்தின் முதலாவதும் மிகவும் முக்கியமானதுமான ஒரு தொழிற்பாடாகும். இது முகாமையின் ஒவ்வொரு மட்டத்திலும் தேவைப்படுவதுடன் நிறுவனச் சூழலில் புத்திசாதுரியமான (rational) தீர்மானங்களை எடுப்பதற்கும் உதவுகிறது. நிறுவனமானது அதன் திட்டமிடலை செவ்வனே செய்கின்ற போதிலும் திட்டமிடலுக்கான தடைகளும் காணப்படத்தான் செய்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிநிலைகளைக் (steps) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) வணிக நிறுவனமொன்றின் இரண்டு (02) வகையான திட்டங்களை (plans) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் தடைகளைச் சமாளிக்கும் இரண்டு (02) வழிமுறைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

இலங்கையில் நிலவிய நோய்த்தொற்று நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி நிலை என்பன நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் அதன் தந்திரோபாயங்கள் பற்றி மீளவும் சிந்திப்பதற்கும் அவற்றை மீள் வடிவமைப்புச் செய்வதற்கும் வழியமைத்தன. இந்த மாற்றம் அடிப்படையானதாகவும் முகாமையாளர்கள் தமது வகிபாகம் பற்றி மீளச் சிந்திப்பதற்குத் தேவையானதாகவும் அமைந்திருந்தன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பின் இரண்டு (02) பின்னடைவுகளைக் (drawbacks) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிறுவனக் கட்டமைப்புக்கும் தந்திரோபாயத்திற்குமிடையிலான தொடர்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) இலங்கையின் தற்காலச் சூழலில் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் இரண்டு (02) வகிபாகங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

வாய்மொழி மூலமான மற்றும் எழுத்துபூர்வமான தொடர்பாடல் முறைகள் நிறுவனங்களுள் மிகவும் பொதுவானவையாகும். ஒரு நிறுவனத்தினுள் இடம்பெறும் பயனுறுதிமிக்க தொடர்பாடலானது பயனுறுதிமிக்க வகையில் தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் முக்கியமானதாகும். மேலும், பயனுறுதிமிக்க தொடர்பாடலானது நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளின் செயலாற்றுகையை இலகுபடுத்துகிறது. எவ்வாறாயினும், பெரும்பாலான முகாமையாளர்களால் சில தடைகள் காரணமாக தமது நிறுவனங்களில் பயனுறுதிமிக்க தொடர்பாடல் முறைமைகளைப் பேண முடிவதில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனமொன்றிற்கு பயனுறுதிமிக்க தொர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) கட்டுப்படுத்தலின் இரண்டு (02) பண்புகளை (characteristics) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

அடிக்கடி நிலவும் சந்தைக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்திச் செயன்முறையானது தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும். இது நெருக்கடி மிகுந்த காலப்பகுதியில் சவாலான ஒரு விடயமாகும். எவ்வாறாயினும், தொழிற்பாட்டு முகாமைத்துவமானது உற்பத்திச் செயன்முறையின் பயனுறுதித்தன்மையையும் வினைத்திறனையும் பேணுவதற்கு உதவுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனமொன்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் இரண்டு (02) வழிமுறைகளை **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றின் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் கீழ்வரும் தொழிற்பாடுகள் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை **விபரிக்குக** :

(i) வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் (supply Chain Management). (02 புள்ளிகள்)

(ii) தர முகாமைத்துவம் (Quality Management) (02 புள்ளிகள்)

(c) தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் கேள்வியை எதிர்வுகூறுவதன் (demand forecasting) இரண்டு (02) முக்கியத்துவத்தை **இனங்காண்க.**

(02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

இலங்கை, பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீளவேண்டுமானால், ஏற்றுமதி தொடர்பான வணிகங்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென இலங்கையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிக நிறுவனங்களுக்கு ஏற்றுமதிச் சந்தைகளில் கவனம் செலுத்தி டொலர்களை ஈட்டுவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

**டிலந்த** என்பவர் மேல் மாகாணத்திற்கு பழங்களை வழங்கும் ஒரு உள்நாட்டு வழங்குநராவார். அவர் இதனை தனியொரு வகையான பழங்களை மாத்திரம் வழங்குகின்ற ஒரு சிறிய அளவு வியாபாரமாக ஆரம்பித்தார். ஆனால் தற்போது ஒரு வாரத்தினுள் பலதரப்பட்ட இருப்புகளை வழங்கல் செய்யும் அளவிற்கு இவ்வியாபாரம் வளர்ந்துள்ளது. பெரும்பாலான அவரது வியாபார நடவடிக்கைகள் அவரது தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் நீண்ட கால உறவுகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. இதனால் சந்தைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பணத்தைச் செலவு செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர் பொருள்களை ஏற்றுமதி செய்யும் யோசனையுடன், சர்வதேச சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு வழிமுறையாக சமூக ஊடக தளத்தை உருவாக்கவும் இலங்கையில் அவர் என்ன செய்கிறார் என்பதைக் காட்டவும் பல்வேறு சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை நடத்தவும் திட்டமிட்டுள்ளார். அவர் மிகவும் பாரம்பரியமிக்க ஒரு நபர் என்பதுடன் பாரம்பரிய சந்தைப்படுத்தல் முறைகள் மீது மிகவும் நம்பிக்கை கொண்டவர். இதனால், இந்த யோசனை பற்றிய சில சந்தேகங்களை அவர் கொண்டிருப்பதுடன் சந்தைப்படுத்தல் பிரச்சாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு முன் ஆய்வொன்றை நடத்துவதற்கு அவர் விரும்புகிறார்.

**டிலந்த** அவரது வியாபாரத்தில் குறிப்பிடத்தக்களவு முதலீடுகளைச் செய்ய விரும்புகிறார். பழங்களை மற்றைய சந்தைகளுக்கு கப்பலேற்றுவதற்கு மேலதிகமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஒரு பழப் பானத்தையும் தயாரிக்கத் திட்டமிடுகிறார். நுகர்வோருக்கு முன்னுரிமையளித்து, அவற்றை ஏற்றுமதி செய்யும் நோக்கில் தனது தயாரிப்புகளை விருத்தி செய்ய வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பாகும்.

இந்த அனைத்து அபிவிருத்திகளினது வெளிச்சத்திலும் மேலதிக வேலைகளைத் தொடர்வதற்கான கம்பனியில் மனித வள இயலுமை மற்றும் தற்போதைய சம்பளங்கள் குறித்து ஊழியர்கள் கவலை அடைந்துள்ளனர். இதனால், சமீபத்திய நிறுவன மாற்றங்களின் விளைவாக மனித வள முகாமைக்கான தேவை எழுந்துள்ளது. **டிலந்த** புதிய வியாபாரத்திலும் உள்நாட்டு வியாபாரத்தை ஒரு சர்வதேச வியாபாரமாக மாற்றுவதற்கு அதி நவீன தொழினுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் அதிக கவனம் செலுத்துகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **டிலந்தவின்** வியாபாரம் சர்வதேச அளவில் வளர்ச்சியடைவதற்கு பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் எவ்வாறு உதவும் என்பதற்கான மூன்று (03) வழிமுறைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) தந்திரோபாயமொன்றை விருத்தி செய்யும்போது, SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி **டிலந்த** எவ்வாறு சூழல் பகுப்பாய்வை கவனத்திற் கொள்ளலாம் என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) மனித வள திட்டமிடல் செயன்முறையின் வெற்றிக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(d) ஒரு பொருத்தமான வெகுமதி முகாமைத்துவ முறைமையின் மூன்று (03) நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(e) மாற்றத்தைத் தழுவி ஏற்றுக்கொள்ள ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு **டிலந்த** பயன்படுத்தக்கூடிய மூன்று (03) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |